சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 09.03.2026

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | **126/2025** |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-11 |
| சாட்சியின் பெயர் | : | சந்தியா |
| தந்தை பெயர் | : | குணசேகரன் |
| கிராமம் | : | நாஞ்சிக்கோட்டை |
| தாலுக்கா | : | தஞ்சாவூர் தாலுக்கா மற்றும் மாவட்டம் |
| தொழில் | : | மருத்துவர் |
| வயது | : | 33 |

2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 09 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.ஆர்.வீரபாண்டியன் அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது மன்னார்குடி அமைந்துள்ள மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 01.06.2025 ஆம் தேதி இரவு 9.45 மணியளவில் பணியிலிருந்தபோது பைங்காநாடு கிராமம், காலணி தெருவில் வசிக்கும் சின்னக்கண்ணு மகன் 35 வயதுடைய கஜேந்திரன் என்பவரை அவரது உறவினர் குபேந்திரன் என்பவர் சிகிச்சைக்காக அழைத்து வந்திருந்தார். நான் அவரை சிகிச்சை அளிக்கும் பொருட்டு அவரை நான் பரிசோதித்தபோது, அன்றைய தினம் இரவு 8.00 மணியளவில் பைங்காநாடு மது கடை அருகில் அடையாளம் தெரிந்த ஒரு நபரும், அடையாளம் தெரியாத நான்கு நபர்களும் தனது வலது காலிலும், முதுகிலும் தாக்கியதாக கூறினார். அவர் முழு சுயநினைவுடன் காணப்பட்டார். மேலும் அவரிடமிருந்து மது வாடை வந்தது. வெளிப்புற காயங்கள் எதுவும் இல்லை. இடுப்பில் வலி இருப்பதாக கூறியதை தொடர்ந்து அவரை உள்நோயாளிகாக மருத்துமனையில் சிகிச்சைக்காக அனுமதித்து விபத்து பதிவேடு பதிவு செய்தேன். அந்த விபத்து பதிவேடு **அ.சா.ஆ-6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அவருக்கு தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்ட போதிலும், அவருக்கு இருந்த காயங்கள் சாதாரண காயங்கள் என்று தெரிய வந்ததால் அ.சா-1 க்கு இருந்தகாயம் சாதாரண காயம் என அ.சா.ஆ-6 ன் பின்புறத்தில் குறிப்பிட்டு சான்று அளித்துள்ளேன். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

அ.சா-1 வலியிருப்பதாக கூறியது பாசாங்காக கூட இருக்கலாம் என்றால் இருக்கலாம்.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.03.09 18:04:15 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.